**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102127

1. District / மாவட்டம்: Ranipet    PS / காவல்நிலையம்: VSAC    Year / ஆண்டு: 2023    FIR No. / மு.த.அ. எண்: 01/23    Date / நாள்: 14-02-2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act    Sections பிரிவுகள்: U/s 7
(ii) Act சட்டம்: 1988 as Amended by PC    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Ac 2018    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 07.02.2023    Date to : நாள் வரை 09.02.2023 at 1900hrs
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14-02-23    Time : நேரம் 0600 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I 14-02-23    Time : நேரம் 0800 hrs & 0900 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — O/o Tahsildar, Arcot 61kms South East
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி O/o Tahsildar, Arcot Taluk Ranipet District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Sagadevan    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Varadharaj
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 28 Yrs.    (d) Nationality : நாட்டினம் Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —    Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation தொழில் Photographer    (g) Address : முகவரி No 157/1 Road street cheyyananthal village, Chetpet Tk. Ranipet District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Accused: Tr. C. Suresh. Tahsildar, Arcot Taluk Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — As the Complainant went to chennai for urgent work hence the delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any :
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V.S. [signature] 14/02/2023

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Vijayalakshmi 14/2/23
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14/2/23 @ 10.30hrs

Name பெயர் Inspector of Police
Rank நிலை Vigilance & Anti Corruption No. எண்
Ranipet Detachment

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:</u> இன்று 14.02.2023-ஆம் தேதி காலை 08.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.V.சகாதேவன், த/பெ வரதராஜ், எண்.157/1, ரோடுத்தெரு, செய்யானந்தல் கிராமம், சேத்துப்பட்டு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம் என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் V.சகாதேவன், த/பெ வரதராஜ், எண்.157/1, ரோடுத்தெரு, செய்யானந்தல் கிராமம், சேத்துப்பட்டு தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. அய்யா, நான் திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு தாலுக்காவில் உள்ள செய்யானந்தல் கிராமத்தில் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறோம். எனக்கு திருமணமாகிவிட்டது. நான் சென்னை அரும்பாக்கத்தில் சகா மீடியா அண்டு போட்டோகிராபி என்ற பெயரில் போட்டோ ஸ்டுடியோ மற்றும் காமிராக்களை வாடகைக்கு விடும் கடை வைத்து நடத்தி வருகிறேன். என்னுடைய அம்மா பெயர் செல்வி. என்னுடைய தம்பி பெயர் கண்ணதாசன். அவர் B.Com. இரண்டாம் ஆண்டு செய்யாறு அறிஞர் அண்ணா கலைக்கல்லூரியில் படித்து வருகிறார். என் அம்மாவின் பூர்வீக கிராமமானது இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தாலுக்கா மாங்காடு கிராமம் ஆகும். என்னுடைய அம்மாமவின் அப்பா பெயர் லோகப்பிள்ளை த/பெ வெள்ளைப்பிள்ளை ஆவார். அவர் கடந்த 2019 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன் மாங்காடு கிராமத்தில் அவர் பெயரில் சர்வே எண்.363/2A-ல் இருந்த 51 செண்ட் நிலத்தை அவருடைய வாரிசுகளான என்னுடைய அம்மா செல்வி, பெரியம்மா குமாரி மற்றும் சித்தி வனமயில் ஆகிய மூன்று பேர்களின் பெயர்களில் தானசெட்டில்மெண்ட் செய்து கொடுத்தார். அந்த சொத்தானது அவர்கள் மூன்று பேர்களின் பெயர்களில் கூட்டுப்பட்டாவாக பட்டா பெயர் மாற்றம் செய்ய கடந்த 2016 ஆம் ஆண்டு ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆன் லைனில் விண்ணப்பித்தபோது, மேற்படி சொத்து நத்தம் புறம்போக்காக கணினியில் காண்பித்தது. இதனால் கூட்டுப்பட்டா எங்களால் பெற முடியவில்லை. கடந்த 2016 ஆம் ஆண்டு அப்போதைய ஆற்காடு வட்டாட்சியருக்கு எங்களுடைய சொத்து நத்தம் புறம்போக்கு என தவறுதலாக UDR-ல் உள்ளது குறித்தும், அந்த சொத்தை என்னுடைய தாத்தா லோகப்பிள்ளை அவர்களுடைய பெயரில் இருந்து என்னுடைய அம்மா, பெரியம்மா மற்றும் சித்தி ஆகியோர்களின் பெயர்களில் கூட்டு பட்டாவாக பெயர் மாற்றம் செய்து கொடுக்கும்படி என்னுடைய தாத்தா அவர் இறப்பதற்கு முன்பு வரை ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு மனு கொடுத்தார். அதன் பின்னர், ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம் பிரிந்தவுடன், இராணிப்பேட்டை

மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு என்னுடைய பாட்டி லஷ்மி க/பெ லோகப்பிள்ளை அவர்களும் மனு கொடுத்தார். எனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று அந்த மனுக்கள் குறித்து நானும் விசாரிப்பேன். அதேபோல இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும் போய் விசாரிப்பேன். அதுபோல் நான் கடந்த 06.02.2023 ஆம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள A-2 Section-க்கு போய் என்னுடைய தாத்தா லோகப்பிள்ளை அவர்களின் மனு குறித்து விசாரித்தபோது, அந்த பிரிவில் உள்ள அலுவலர் ஒருவர் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.நி.மு.டி2/803/2021, நாள்:20.01.2023-ன நகல் ஒன்றை எனக்கு கொடுத்து, ஆற்காடு வட்டாட்சியர் அவர்களை அணுகி ஆன் லைனில் உள்ள பிழையை சரி செய்து கொள்ளும்படி கொடுத்தார். நான் அந்த செயல்முறையை படித்து பார்த்தபோது, அதில் ஆற்காடு வட்டம், மாங்காடு கிராமம் புன்செய் புல எண்.363/2A பரப்பு 0.20.5 ஹெக்டேர் நிலம் கணினி அ-பதிவேட்டில் தவறுதலாக அரசு நத்தம் புறம்போக்கு பட்டா எண்.0 என பதிவாகியுள்ளதை, இரயத்துவாரி புன்செய் என வகைப்பாடு திருத்தம் செய்து, தற்போதைய தமிழ் நில கணினி அ-பதிவேட்டில் கிராமத்தின் கடைசி பட்டா எண்ணில் தான செட்டில்மென்ட்படி மனுதாரரின் மகள்கள் திருமதி.குமாரி, திருமதி.செல்வி, திருமதி.வனமயில் ஆகிய மூவர்களின் பெயர்களில் பதிவு செய்து ஆணையிடப்படுகிறது என இருந்தது. பின்னர், அந்த செயல்முறை ஆணையுடன் நான் கடந்த 07.02.2023 ஆம் தேதியன்று காலை சுமார் 11.00 மணிக்கு நான் ஆற்காடு தாலுக்கா ஆபீஸிற்கு போய் A-2 Section-ல் உள்ள அலுவலரை பார்த்தபோது அங்கிருந்தவர் ஆன் லைனில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையை அப்லோடு செய்தார். பின்னர், நான் ஹெட் சர்வேயரை போய் பார்த்தேன். அவரும் அவருடைய Log-in-ல் இருந்து பார்வேர்டு செய்தார். அதன் பின்னர், சுமார் 2.30 மணிக்கு ஜோனல் டெபுடி தாசில்தாரை போய் பார்த்தேன். உடனே அவர் தாசில்தார் அறைக்கு சென்று விவரத்தை சொல்லிவிட்டு என்னிடம் வந்து நானும், தாசில்தார் அவர்களும் உன்னுடைய இடத்தை பீல்டு இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டும் என்று சொன்னார். நானும் சரி என்று சொல்லி அவர்களை மாங்காடு கிராமத்தில் உள்ள எங்களுடைய நிலத்திற்கு சுமார் 4.30 மணிக்கு அழைத்துச்சென்றேன். அங்கே அவர்கள் இருவரும் பீல்டு இன்ஸ்பெக்ஷன் செய்தனர். பின்னர், தாசில்தார் சுரேஷ் அவர்கள் என்னிடம் மேற்படி நிலத்திற்கு என்ன கைடு லைன் வேல்யூ, சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்று கேட்டு, எனக்கு ரூ.25,000/- ஐ லஞ்சமாக கொடுத்தால்தான் நத்தம் புறம்போக்கு என தவறுதலாக பதியப்பட்டிருப்பதை கணினியில் மாற்றம் செய்து கூட்டு பட்டாவாக

கொடுக்கிறேன் என்று சிரித்துக்கொண்டே ஆற்காடு ஜோனல் டெபுடி தாசில்தார் முன்பாக என்னிடம் கேட்டார், நானும் அவர் வேடிக்கைக்காக சொல்கிறார் என நினைத்து, ஆற்காடு தாலுக்கா அலுவலகத்திற்கு சுமார் 5.30 மணிக்கு வந்து சேர்ந்தோம். மீண்டும் அவரது அறையில் என்னை அழைத்துக்கொண்டு போய் ரூ.25,000/- பணம் கொடுத்தால்தான் வேலை முடியும் என்று சொன்னார். நான் என்னால் அவ்வளவு பணம் தர முடியாது என்று சொல்லிவிட்டு வெளியில் வந்து ஜோனல் டெபுடி தாசில்தாரை போய் பார்த்தேன். உடனே அவர் என் முன்பே கணினியில் அப்லோடு செய்துவிட்டு என்னை பார்த்து இனிமேல் தாசில்தார் அவர்களையே போய் பாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார். பின்னர், 09.02.2023 ஆம் தேதியன்று மதியம் சுமார் 2 மணிக்கு நானும், என்னுடைய பெரியம்மா மகன் கோதண்டன் என்பவரும் ஆற்காடு தாசில்தார் அலுவலகம் போய் தாசில்தார் சுரேஷ் அவர்களை பார்த்தபோது, அவர் என்னிடம் என்ன நான் கேட்ட பணம் கொண்டு வந்துள்ளீர்களா என கேட்க, நான் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால்தான் வேலை முடியும் இல்லை என்றால் எத்தனை வந்தாலும் அப்படியேதான் இருக்கும் என்று சொல்லி விட்டு வெளியில் போய்விட்டார். அவர் வரும் வரை காத்திருந்து மீண்டும் அன்று மாலை சுமார் 7.00 மணிக்கு தாசில்தார் சுரேஷ் அவர்களை அவருடைய அலுவலகத்தில் சந்தித்து, மீண்டும் பட்டா பெயர் மாற்றம் குறித்து கேட்டபோது நான் ஏற்கனவே உங்களிடம் கேட்ட பணத்தை கொடுக்குமாறு கேட்டார். நான் அவரிடம் எங்களுடைய குடும்ப சூழ்நிலையை சொல்லி கெஞ்சி கேட்டபோதும், அவர் வேண்டுமென்றால் ஆளுக்கு ரூ.5,000/- என மொத்தம் ரூ.15,000/-த்தை கொடுத்தால் மட்டுமே என்னால் பட்டா பெயர் மாற்றம் செய்து என்னுடைய Log in ல் இருந்து அப்லோடு செய்வேன் என கண்டிப்பாக சொல்லி என்னை வெளியில் போகும்படி சொல்லிவிட்டார். பின்னர், நான் எனது ஊருக்கு போய் எனது பெரியம்மா, அம்மா மற்றும் சித்தி ஆகியோர்களிடம் தாசில்தார் பதினஞ்சாயிரம் ரூபாய் பணத்தை லஞ்சமாக கேட்பது பற்றி சொன்னேன். எங்கள் யாருக்கும் ரூபாய் பதினஞ்சாயிரத்தை லஞ்சமாக கொடுத்து கூட்டுப்பட்டா பெற விருப்பமில்லை. எனவே, என்னிடம் ரூபாய் பதினஞ்சாயிரம் பணத்தை லஞ்சமாக கேட்கும் ஆற்காடு தாசில்தார் சுரேஷ் அவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் அவசர வேலை நிமித்தமாக சென்னை சென்றுவிட்டதால் என்னால் உடனடியாக இராணிப்பேட்டை விஜிலென்ஸ் ஆபீஸிற்கு வந்து புகார் கொடுக்க முடியவில்லை. இந்த புகார் மனுவுடன் மாங்காடு கிராமத்தில் சர்வே எண்.363/2A 0.20.5 ஹெக்டேர் நிலத்திற்குண்டான பத்திர ஆவண நகல் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை

எண்.நி.மு.டி2/803/2021, நாள்:20.01.2023 நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd/-xxxxxxxx (V.Sagadevan), 14/02/2023.

Inspector Tmt.S.Vijayalakshmi to Receive the complaint and register a case. Sd/-xxxxxxxxxxx (V.GANESAN) 14/02/2023, DSP/VAC/ RANIPET.

Sir, Received the complaint on 14.02.2023 at 08.00 hrs after verifying the antecedents of the accused and credibility of the complainant at 09.00 hrs, I have registered a case in Ranipet V&AC Cr.No.01/2023 u/s. 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018. Sd/-xxxxx (S.Vijayalakshmi) 14/2/23 Ins. of Police, V&AC, Ranipet.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and other copies sent to the officers concerned.

S. Vijayalakshmi
14/2/23

*Inspector of Police*
Vigilance & Anti-Corruption
Ranipet.